ந.க.எண். 14400/2008/இ 1 நாள். 4.08.2008

பேரூராட்சிகள் ஆணையரகம்
சென்னை

**சுற்றறிக்கை**

பொருள்– கட்டிட அனுமதி (பிரிவு 191) மற்றும் தொழிற் சாலை நிறுவ கட்டிட அனுமதி மற்றும் உரிமம் (பிரிவு) மற்றும் உரிமம் (பிரிவு 249) வழங்குதல் – அறிவுரை வழங்கப்பட்டது – சார்பாக

பேரூராட்சிகளில் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற் பேரூராட்சிகள் நிர்வாக அதிகாரிக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 191வது பிரிவின் படி வழங்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகள் 1972 மற்றும் சட்ட பிரிவு 197ன்படி விண்ணப்பம் செய்து உரிய அனுமதிப் பெற்று, அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடம் கட்டப்பட வேண்டும். மேற்படி கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பத்தில் கீழ்க்கண்ட தகவல்கள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

1. கட்டிடம் கட்ட உத்தேசித்துள்ள உரிமையாளரின் விண்ணப்பம்
2. கட்ட உத்தேசித்துள்ள கட்டிடத்தின் சரியான அளவு மற்றும் கட்டிடத்தின் தோற்றத்தை குறிப்பிடும் வரைபடம்
3. கட்டிடம் கட்டும் இடத்திற்கான உரிமையை உறுதிபடுத்தும் ஆவணங்கள்

இவ்விரங்களை கொண்டு விண்ணப்பம் பெற்று பரிசீலித்து தல ஆய்வு மேற்கொண்டு மேற்படி மனுதாரர் கொடுத்த தகவல்களின் சரித்தன்மையை உறுதி செய்து பின்னர் மேலே பத்தியில் குறிப்பிட்ட கட்டிட விதிகளின் படியும், சட்டப் பிரிவு 200, 201 மற்றும் 202 ஆகிய பிரிவுகளில் வழங்கப்பட்ட அறிவுரைகளின் படி விண்ணப்பம் பெற்ற 30 தினங்களுக்குள் மேற்படி விண்ணப்பித்திற்கான அனுமதி அல்லது அனுமதி மறுப்பு குறித்த தகவலை மனுதாரருக்கு செயல் அதிகாரி என்ற முறையில் செயல் அலுவலரால் வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 200 மற்றும் 201ன் படி நிர்வாக அதிகாரி 30 நாட்களுக்குள் கட்டிடம் கட்ட அனுமதி வழங்குதல் / மறுத்தல் குறித்த தகவலை வழங்கப்படவில்லையெனில் மன்றத்தின் கவனத்திற்கு விண்ணப்பதாரர் கொண்டு செல்லலாம். மன்றம் சட்டப் பிரிவு 202 (2) மற்றும் 211(2)ன் படி மேற்படி விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து 30 தினங்களுக்குள் முடிவு செய்து அனுமதி வழங்குதல்/மறுத்தல் தொடர்பான விவரங்களை தெரிவிக்க வேண்டும். அவ்வாறு மன்றத்தினால் விண்ணப்பத்தாரருக்கு உரிய காலங்கெடுவிற்குள் விவரங்கள் வழங்கப்படவில்லையெனில், நகராட்சிகள் சட்டம் மற்றும் அதன் கீழ் வழங்கப்பட்ட விதிகளின் படி மனுதாரருக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவே கருதப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

இதே போன்று பேரூராட்சிப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்களை நிறுவுவதற்கு அனுமதி கோரும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட கட்டிட முனைவோர் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகள் மற்றும் மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 249, 250 மற்றும் பிரிவு 321 ஆகியவற்றின் அடிப்படையில் உரிய விண்ணப்பங்களை பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் கீழ்க்கண்ட அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும்.

1. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
2. பொது சுகாதார துணை இயக்குநர்
3. தொழிற்சாலை ஆய்வாளர்
4. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
5. மாவட்ட தீயணைப்பு அலுவலர்

தொழில் முனைவோரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்த்தினை ஆய்வு செய்து, மேலே குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட அலுவலருக்கு பரிந்துரை செய்து அவர்களிடமிருந்து தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் மன்றத்தின் ஒப்புதலுடன் மேற்டி தொழிற்சாலைகளுக்கான அனுமதியும், கட்டிட அனுமதியும் வழங்கப்பட வேண்டும். ஆனால் மேற்படி

தொழிற்சாலை அமைப்பதற்கு பேரூராட்சி செயல் அலுவலர் அரசாணை எண். 160, தொழில்துறை நாள் 12.9.96ல் வழங்கப்பட்டுள்ள நடைமுறைகளின் படியும் (நகல் இணைக்கப்படுகிறது), தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின் படியும் கட்டிட அனுமதி வழங்குதல் வேண்டும்.

அதேபோன்று தொழிற்சாலை அமைக்க கட்டிட உரிமம் கோரி விண்ணப்பிப்பவர் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 250(7) விண்ணப்பம் அளிக்கப்பட்ட 60 நாட்களுக்குள் அனுமதி ஏதும் செயல்படுத்தும் அதிகாரியிடமிருந்து பெறப்படவில்லையெனில், விண்ணப்பத்தாரர் சட்ட விதிகள் மற்றும் உப விதிகளின் அனுமதி வழங்கப்பட்டதாக கருதப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது .

ஒரு சில நிகழ்வுகளில் முறையான அனுமதி பெற விண்ணப்பித்து இருந்தும், உரிய துறை அலுவலர்களின் தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டிருந்தும் பேரூராட்சி மன்றங்கள் அனுமதி வழங்காமல் மேற்படி தொழிற்சாலை அமைப்பதற்கு உரிமம்/அனுமதி வழங்கவில்லையென்று இவ்வாணையரகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஒரு சில நிகழ்வுகளில் பேரூராட்சி மன்றங்கள் அனைத்து துறைகளிடமிருந்தும் பெறப்பட்ட பரிந்துரைகளை பரிசீலனை செய்து பின்னர் உரிய காரணங்கள் இன்றி மேற்படி தொழிற்சாலை அனுமதியை மறுப்பதாக தெரிய வருகிறது. ஒரு சில நிகழ்வுகளில் தொழிற்சாலை நடத்த உரிமம் வழங்க மறுத்துள்ளது குறித்தும் தெரிய வருகிறது. இது போன்ற நிகழ்வுகள் மேலும் தொடருமானல் சம்பந்தப்பட்ட நகர் மன்றங்கள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்ட பொறுப்புகளையும், கடமைகளையும் உரிய முறையில் நிறைவேற்றாமல் தங்களது கடமையிலிருந்து தவறியதாக கருதப்பட்டு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பேரூராட்சிப் பகுதிகளில் உரிய தொழிற்சாலை உருவாகி வேலை வாய்ப்புகள் பெருகுவதற்கு நகர் மன்றங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் சூழ்நிலையில் தக்க காரணங்கள் இன்றி உரிய அனுமதியை வழங்க மறுப்பதும், தாமதம் செய்வதும் சட்டத்திற்கு புறம்பானதாக கருதப்படுகிறது.

சில இடங்களில் பேரூராட்சி செயல் அலுவலர்கள் தொழிற்சாலை கட்டிட அனுமதி மற்றும் உரிமம் குறித்து மன்றக் கூட்டப் பொருளில் சேர்ப்பது இல்லை என்றும் மிகவும் தாமதம் செய்வதாகவும் புகார்கள் வந்துள்ளன. எனவே இது குறித்து தாமதங்கள் இன்றி மன்றக் கூட்டப் பொருளில் சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்க செயல் அலுவலர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்படி இனங்களில் மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு சென்று, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 34ன் கீழ் மாவட்ட ஆட்சியர் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், தொழில் முனைவோரின் செய்து உரிய உத்திரவை பிறப்பிக்க மன்றத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரை வழங்கலாம்.

இம்மாதிரியான வழிமுறைகளை பின்பற்றிய பின்னரும் மன்றம் உரிய காரணங்கள் இன்றி தீர்மானம் நிறைவேற்றாமல் இருப்பின் அல்லது விதிகளுக்கு முரணாக தீர்மானம் இயற்றி இருப்பின், மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு சென்று தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 35 மற்றும் 37ன் படி நடவடிக்கை மேற்கொள்ளலாம். அல்லது மன்றத் தீர்மானத்தினை ரத்து செய்யவேண்டுமெனில் பிரிவு 36ன் படி அரசுக்கு கருத்துரு மாவட்ட ஆட்சியர்/பேரூராட்சிகள் ஆணையர் வழியாக அனுப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உரிய காரணங்களின்றி, சட்டம் ஒழுங்கு பிரச்சினை மற்றும் வேறு ஏதேனும் காரணம் காட்டி , தொழிற்சாலை கட்டிட உரிமம் கொடுப்பதில் தாமதம் ஏற்படின், மாவட்ட நிர்வகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று, சட்ட ஒழுங்கு பிரச்சனையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தொழிற்சாலை அமைப்பதால் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் என கருதப்படின், சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து தடையில்லா சான்று/தொழில் நுட்ப கருத்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சியருக்கும்/பேரூராட்சிகள் உதவி இயக்குநருக்கும் இப்பொருள் தொடர்பான அறிக்கையை கீழ்க் கண்டுள்ள விவரங்களுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. தொழிற்சாலை அமைக்க கட்டிட உரிமம் கோரி நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் எண்ணிக்கை
2. நடப்பு மாதத்தில் தொழிற்சாலை அமைக்க கட்டிட உரிமத்திற்கு பெறப்பட்ட விண்ணப்பங்கள் எண்ணிக்கை
3. மொத்தம்
4. பேரூராட்சியால் தொழிற்சாலை அமைக்க நடப்பு மாதத்தில் கட்டிட உரிமம் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
5. தீர்வு செய்யப்படாமல் நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள்
6. நிலுவைக்கான காரணங்கள்
7. நிர்வாக அதிகாரியின் குறிப்புரை

இச்சுற்றறிக்கையைப் பெற்றமைக்கான ஒப்புதலை அனுப்பி வைப்பதுடன், அதில் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி செயல்பட அறிவுறுத்தப்படுகிறது.

**ஒம்/– கே.கோபால்**
ஆணையர்

இணைப்பு

பெறுநர்

அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள்

நகல் அனைத்து மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர்கள்
நகல் அனைத்துபிரிவு கண்காணிப்பாளர்கள்
நகல் இ1